Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No.CC.No.141/2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| Name: | சந்திரசேகர் | Calling: | துணை காவல் கண்காணிப்பாளர் ஓய்வு |
|---|---|---|---|
| Father's Name/ Husband's Name: | பாலகிருஷ்ணன் | Religion: | |
| Village: | எய்தனூர் | Age: | 60 |
| Taluk: | பன்ரூட்டி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 14.05.2026 நேரம்: 12.48 PM

( எதிரிகள் ஆஜர் .)

அ.சா. 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் புகார் கொடுக்கவில்லை என்றாலும் அவர் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். உதவி ஆய்வாளர் ரோந்து சென்றதை குறித்து பொது நாட்குறிப்பில் எழுதிச்சென்றாரா என தெரிந்துக்கொண்டேனா என்றால் எழுதியுள்ளார். இவ்வழக்கில் உள்ள சாட்சிகள் காவல் நிலைய கையிருப்பு சாட்சிகள் என்றால் இல்லை. அ.சா.2 காவல் நிலையத்தில் பணிபுரிபவர் என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சி சதீஷ் என்பவர் அவர் வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்ததாகவும் அதில் என்ன உள்ளது என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.3 சம்பவத்தை குறித்து தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது பாதிக்கப்பட்ட நபரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையில் சம்பவம் நடந்ததால் நான் நெடுஞ்சாலை ரோந்து காவலர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும், நாங்கள் மாதிரி வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள இடமும் மூன்று கி.மீ. தொலைவில் இருப்பதால் சம்பவம் இடம் சென்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்வதற்காக உதவி ஆய்வாளரை வைத்து பொய்யான புகாரை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கூறுவது போல மதுசூதனனை மிரட்டி பணம் பறிக்கவில்லை என்றாலும், அவர்களை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் வாணியம்பாடியில் நகைகடை வைத்து வியாபாரம் செய்வதால் அவர்களுக்கும் உதவி ஆய்வாளருக்கும் இருந்த வெறுப்பின் காரணமாக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலே வைத்து தயாரித்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. உதவி ஆய்வாளரை வைத்து தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பொது நாட்குறிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சந்திரசேகர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.05.15 14:19:22 +0530